**SC.323/17 PW12** முகமதுஜாபர்கான் **12.4.18**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

ஆணையூர் , டிஎன் கைச்பி காலனி , கதவு எண் எஸ் 120 ல் லிருந்து ஆய்வாளர் மூலம் பிரேதத்தை பெற்று கொண்டு பிரேத பரிசோதனைக்கு ஒப்படைத்தேன். பிரேதம் ஒப்படைத்ததற்கான கடவுசீட் என்னிடம் வழங்கப்பட்டது. 21.35 மணிக்கு பிரேதத்தை பெற்று கொண்டு 21.55 மணிக்கு அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தேன். பிரேதத்தை ஆம்புலன்சு மூலம் கொண்டு சென்றேன். நான் பிரேதம் எடுத்து செல்லும் போது எங்கள் துறையை சார்ந்தவர்கள் யாரும் வரவில்லை. வேறு யாரும் வரவில்லை. பிரேத பரிசோதனைக்காக மருத்துவரிடம் ஒப்டைத்து அவரிடம் ஒப்புகை பெற்று கொண்டேன். பிரேத பரிசோதனை முடிந்த பின் ரசாயன பரிசோதனைக்காக உள்ளுறுப்புகளை 1.3.17 அன்று பெற்று கொண்டேன். 2.3.17 அன்று காலையில் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். நான் மறுநாள் காலை வரை ஆய்வகத்தில் ஒப்படைக்காமல் காலம் தாமதம் ஏற்பட்டதற்கு காரணம் உண்டா என்றால் அறிவியல் ஆய்வகத்தில் மாலை 5 மணிக்கு மேல் வாங்கமாட்டார்கள் என்பதால் மறுநாள் ஒப்படைத்தேன். போலிஸ் விசாரணையில் 1 மணியளவில் வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். தபால் வர கால தாமதம்

ஆனதால் அன்று மாலைக்குள் ஆய்வகத்தில் ஒப்படைக்க முடியவில்லை. நான் சட்டபடியான நடவடிக்கைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை இது சம்பந்தமாக விசாரித்தார். அன்றைய தேதியிலேயே விசாரித்தார். வழக்கு சம்பந்தமாக அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை. காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க தவறான தகவல்கள் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம வி --

இல்லை.